## ஆகஸ்ட்– 24 – வெள்ளி

### புனித பர்த்தலோமேயு – திருத்தூதர்

### ஆண்டவரே! நீர் உருவாக்கிய யாவும் நன்றி செலுத்தும்: திபா. 145:10

**முதல் வாசகம் : திருவெளிப்பாடு 21 : 9 – 14**

இறுதியான அந்த ஏழு வாதைகள் நிறைந்த ஏழு கிண்ணங்களைக் கொண்டிருந்த ஏழு வானதூதர்களுள் ஒருவர் வந்து, ”வா, ஆட்டுக்குட்டி மணந்துகொண்ட மணமகளை உனக்குக் காட்டுவேன்” என்று என்னிடம் கூறினார்.தூய ஆவி என்னை ஆட்கொள்ளவே, அந்த வானதூதர் ஒரு பெரிய, உயர்ந்த மலைக்கு என்னைக் கொண்டுசென்றார் திருநகரான எருசலேம் கடவுளிடமிருந்து விண்ணகத்தை விட்டு இறங்கிவருவதை எனக்குக் காட்டினார்.அதில் கடவுளின் மாட்சி விளங்கிற்று விலையுயர்ந்த கல்போன்றும் படிகக்கல்போன்றும் அதன் ஒளி பளிங்கெனத் துலங்கியது.அதைச்சுற்றி பெரிய, உயர்ந்த மதிலும் அதில் பன்னிரண்டு வாயில்களும் இருந்தன. வாயில்களுக்குப் பொறுப்பாய்ப் பன்னிரண்டு வானதூதர்கள் நின்றார்கள். இஸ்ரயேல் மக்களுடைய பன்னிரண்டு குலங்களின் பெயர்களும் அவ்வாயில்களில் பொறிக்கப்பட்டிருந்தன.கிழக்கே மூன்றும் வடக்கே மூன்றும் தெற்கே மூன்றும் மேற்கே மூன்றுமாக அவை அமைந்திருந்தன.நகரின் மதில் பன்னிரண்டு அடிக்கற்களைக் கொண்டிருந்தது. அவற்றில் ஆட்டுக் குட்டியின் பன்னிரண்டு திருத்தூதர்களின் பெயர்களும் எழுதப்பட்டிருந்தன.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் அன்பர்கள் உமதரசின் மாட்சியை அறிவிப்பார்கள்.

**நற்செய்தி : யோவான்1 : 45 – 51**

அக்காலத்தில் பிலிப்பு நத்தனியேலைப் போய்ப்பார்த்து, இறைவாக்கினர்களும் திருச்சட்டநூலில் மோசேயும் குறிப்பிட்டுள்ளவரை நாங்கள் கண்டுகொண்டோம். நாசரேத்தைச் சேர்ந்த யோசேப்பின் மகன் இயேசுவே அவர்” என்றார்.அதற்கு நத்தனியேல்,”நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரமுடியுமோ?” என்று கேட்டார். பிலிப்பு அவரிடம், ”வந்துபாரும்” என்றுகூறினார்.நத்தனியேல் தம்மிடம் வருவதை இயேசுகண்டு, ”இவர் உண்மையான இஸ்ரயேலர், கபடற்றவர்” என்று அவரைக் குறித்துக் கூறினார்.நத்தனியேல், ”என்னை உமக்கு எப்படித் தெரியும்?” என்று அவரிடம்கேட்டார். இயேசு, ”பிலிப்பு உம்மைக் கூப்பிடுவதற்கு முன்பு நீர் அத்திமரத்தின்கீழ் இருந்தபோதே நான் உம்மைக்கண்டேன்” என்று பதிலளித்தார்.நத்தனியேல் அவரைப் பார்த்து, ”ரபி, நீர் இறை மகன் நீரே இஸ்ரயேல் மக்களின் அரசர்” என்றார்.அதற்கு இயேசு, ”உம்மை அத்திமரத்தின்கீழ் கண்டேன் என்று உம்மிடம் சொன்னதாலா நம்புகிறீர்? இதைவிடப் பெரியவற்றைக் காண்பீர்” என்றார்.மேலும் ”வானம் திறந்திருப்பதையும் கடவுளின் தூதர்கள் மானிடமகன்மீது ஏறுவதையும் இறங்குவதையும் காண்பீர்கள் என மிக உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்று அவரிடம் கூறினார்.

**தியானம்:** இன்றைய தியானம் அன்று ஆண்டவராகிய இயேசு எவ்வாறு பிலிப்பு கூப்பிடுவதற்கு முன்பே அத்திமரத்தின் மேல் இருக்கும் போதே நான் உன்னைக் கண்டேன் என்று கூறினாரோ அதேபோன்று தாயின் கருவறையில உருவாகும் முன்பே ஆண்வராகிய இயேசு எங்கள் ஒவ்வொருவரையும் தனக்காக தனது பணியை செய்வதற்காக தெரிந்தெடுத்திருக்கிறார். அதை உணராது நாங்கள் நாம் பிறந்தோம், வளர்ந்தோம். வாழ்ந்தோம் என்ற மனநிலையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் தன்னை நம்பி ஏற்று வாழும் ஒவ்வொருவரும் மீட்பை கண்டடைவார் என்று இறைமகன் இயேசு கூறுகிறார். இந் நம்பிக்கைதான் எம்மை இறைவனோடு இணைத்துக் கொள்ளவும், அவரில் நிலைத்து வாழவும் உறுதுணையாகவும் இருக்கிறது. இவ்வாறு வாழும் பொழுது அழைப்பின் தன்மை வெளிப்படுத்தப்படும், எமது பணிவாழ்வும் சிறக்கும். அன்று அத்திமரத்தின் கீழ் இருந்த நத்தனியேலை ஆண்டவர் அழைத்தது போல் இன்று எங்களையும் அழைக்கிறார். அவ்வழைப்பை ஏற்று நாங்கள் பணியைச் செய்யும் பொழுது பழிச்சொற்கள், அவமனாங்கள் ஏற்படத்தான் செய்யும். யாவும் நன்மைக்கே என்று ஏற்று பிலிப்பு“இயேசுவைக் கண்டேன” என்று நத்தனியேலுக்கு கூறியபோது “நசரேத்தில் நல்லது ஏதும் நடக்குமோ” என்று கேட்கிறார். அப்போது “வந்துபாரும்” என்று பிலிப்பு பதிலளித்தார். (யோவான் 1:45) எங்கள் மத்தியிலும் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே கிறிஸ்தவ கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கத் தவறி வாழந்து கொண்டிருக்கிறார்கள். எனவே எங்கள் மத்தியில் நம்பிக்கையற்றவர்களாக, கிறிஸ்தவ கோட்பாடுகளின்படி வாழாத ஒவ்வொருவரையும் அழைத்து இயேசுவைப் பற்றி அறிவித்து இறைவனில் நம்பிக்கைகொண்டு வாழ அவர்களைத் தயார்படுத்துவோம்.